முன்னாள் தலைமைச் செயலாளர்

பி.சங்கர் ஐ.ஏ.எஸ். மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ.4-

தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் பி.சங்கர் ஐ.ஏ.எஸ். அவர்கள் இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்குத் தெரிவித் துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத் துள்ள இரங்கல் செய்தியில் கூறி யிருப்பதாவது:-

தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளரும், 1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேட்ச் இந்திய ஆட்சிப் பணி அதிகாரியு மான பி.சங்கர் அவர்கள் மறை வெய்தினார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையடைந்தேன். அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித் துக் கொள்கிறேன்.

செய்யாறு உதவி ஆட்சியராக தனது இந்திய ஆட்சிப் பணியைத் துவங்கிய சங்கர் அவர்கள் மாநி லத்தில் பல்வேறு பொறுப்புகளி லும், ஒன்றிய அரசின் செயலாளர் பதவிகளிலும், ஒன்றிய திட்டக்குழு வின் செயலாளர் பதவியிலும், இறுதியாகஒன்றியவிழிப்புணர்வு ஆணையத்தின் தலைவராகவும் திறம்பட நேர்மையுடன் பணியாற் றியவர்.

பி.சங்கர் அவர்களின் மறை வால் வாடும் அவரது குடும்பத்தின ருக்கும், அவருடன் பணியாற்றிய சக இந்திய ஆட்சிப் பணி அதிகாரி களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங் கல் செய்தியில் கூறியுள்ளார்.

நீலகிரி மாவட்ட தி.மு.க.

நகர, ஒன்றிய, பேரூர்க் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிக்கை!

உதகை, நவ. 4 -

நீலகிரி மாவட்டக்கழகச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள அறிக்கை வரு மாறு:

இன்று (4.11.2024 - திங் கட்கிழமை) மதியம் 3 மணி அளவில் நீலகிரி மாவட்ட நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம், மாவட்ட தி.மு.க அலுவல கம்உதகைகலைஞர்அறிவா லயத்தில் அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன் அவர்கள், தொகுதி சட்ட மன்ற பார்வையாளர்கள் தென்றல் செல்வராஜ் (உதகை), பி.ஆர்.பரமேஸ் குமார் (கூடலூர்), மற்றும் அ.திராவிடமணி(குன்னூர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது. இதில் நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் அனைவரும் தவறாது கலந்து சிறப்பி க்கு மாறு வேண்டுகிறேன்.

குறிப்பு: தாங்கள் வரும் போது, தங்களது நகரஒன்றி யபேரூர் கழகத்திற்கு உட் பட்ட BLA2 (வாக்குச்சாவடி நிலை முகவர்கள்) தேவையி ருப்பின் திருத்தப் பட்டி யலை முறைபடுத்தி அவசி யம் கொண்டுவர வேண்டு கிறேன்.

பொருள்: 1. தலைமை கழகஅறிவிப்பின்படி,முதற் கபட்டமாகஒவ்வொருBLA 2 வாக்குச்சாவடி முகவர் களையும் சட்டமன்ற தொகுதிபார்வையாளர்கள் அந்தந்த பகுதிக்கு நேரில் சென்றுசந்திப்பதற்கானஏற் பாடுகள் செய்வது முன் குறித்து.

2. கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.

பட்டிக்காடும் பட்டணமும்

பட்டிக்காடு : ஏன் தம்பி; மராட்டிய மாநிலப் பேரவைத் தேர்தலையொட்டிய பிரச்சாரத்தில் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், அங்கே 'பா.ஜ.க. உள்ளிட்ட மகாயுதி கூட்டணி ஆளுங்கட்சி வேட்பாளர்களுக்குப் போலீஸ் வாகனங்களில் கட்டுக்கட்டாகப் பணம் எடுத்துச் செல்லப்படுகிறது' என்று குற்றம் சாட்டி இருக்கிறாரே ?

பட்டணம் : **ஆமாமய்யா; " ஒருபுறம் கட்டுக் கட்டாய்க் கள்ள நோட்டு, மறுபுறம் எட்டாய் மடிக்கப்பட்ட கசங்கிய ஒற்றை ரூபாய் நோட்டு, இது என்ன உண்டியா, இல்லை இதுதான் ('பா.ஜ.க.வின்') இண்டியா!" என்று கவிஞர் தணிகைச் செல்வன் எழுதியது நினைவுக்கு வருகிறது!**

எழும்பூர் சட்டமன்றத் தொகுதி கலந்தாலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு -

தொகுதிப் பொறுப்பாளர் டாக்டர் .பி.எம்.யாழினி சிறப்புரையாற்றினர்!

சென்னை, நவ.4-

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு தெற்கு பகுதி கழகச் செயலாளர்கள் சொ.வேலு வி.சுதாகர் ஆகியோர் முன் னிலையில் நேற்று (03.11.2024 - ஞாயிற்றுக்கி ழமை) காலை 10.00 மணி யளவில் குயப்பேட்டை, சச்சிதானந்தம் தெரு, அறி ஞர் அண்ணா சமூக நலக் கூடத்தில் நடைபெற்ற கலந் தாலோசனைக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இந்து சம யம் மற்றும் அறநிலைத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் தொகுதி பொறுப்பாளர் டாக்டர் பி.எம்.யாழினி சிறப்புரை யாற்றினர்.

இந்த ஆலோசனை கூட் டத்தில் தமிழன் பிரசன்னா, புனிதவதி எத்திராசன், பரிதி இளம் சுருதி, கே.எஸ்.எம்நா தன், கோ.மணி, அ.நிர்மலா தேவி, நந்தீஸ்வரன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், தாமோ தரன், எல்.சுந்தர்ராஜன், எஸ்.ரசூல், டி.வி.வேலு, எம்.மலர்மாறன், கோ.அன் னபூரணி, எஸ்.ஜெகதீசன், ஆர்.பாபு என்ற சந்திரசேக ரன், எஸ்.டால்பின்ஹரி, இ.மொய்தீன், வான்மதி கதி ரவன், எம்.தில்லைகுமார் பி.சி.சம்பத்குமார் ஜெ. கே.கருணாகரன் கே.வள்ளி சூளைசுப்பராயலு, தி.தயா ளன், வி.அபாய், சு.மனோ கர், ந.பாலு, ஆர்.எம்.ரங்க நாதன், சி.சேகர், எல். சுந்தர்ராஜன், பாத்திமா முசாபர் எம்.சி, எஸ். ரசூல், டி.வி.வேலு, எம். மலர்மா றன், கோ.அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், ஆர்.பாபு என்ற சந்திரசேகரன், எஸ். டால்பின்ஹரி, இ.மொய் தீன், வான்மதி கதிரவன், எஸ்.துலுக்காணம், ஆர்.நித் தியராஜ், எஸ்.ராஜதுரை, மு.ஜெயகுமார், எம். ரமேஷ், ம.வெற்றிவீரன் து.களரிமுத்து, தனஇ ளங்கோ, ஏ.கே.ரபிக்பேக், த.செபஸ்டின் இரா.ஜெய சங்கரன், டி.கிருஷ்ணன், மா.காந்தி, டி.கே.விஜய ராஜ், எல்.ஐ.சி. டி.கர்ணா, எஸ்.நாராயணன், மு.கமலக் கண்ணன், டாக்டர். பெ.வெற்றிகுமார், எட் வின், எம்.வெற்றிவேலன், எஸ்.முத்து, இப்ராஹிம், விஜய ராதாகிருஷ்ணன், எம்.முத்து, அ.தங்கசெல் வம், ந.கிருஷ்ணன், கே. ஜெயகுமார்

ஜெ.தேவ கிருபை ரா.மணிகண்டன், த.பிரிதி விராஜ் பி.நவின் ரகிபுல்லா (எ) ஸகுர் மா.மதியழகன், க.ராஜ்குமார், எஸ்.செல்வி, ந . மோகன்குமார், ஜெ.மொகிந்தர் அமர்நாத், சு.சுகன்யா, எம்.ஜி.செல் வம், கே.கோகுல், எம்.ஜி. எஸ்.செந்தில்குமார், ஜெ. பால்மோகன் ஜி.காண்டீ பன் எம்.மதிவாணன், எ.சர வணன், ஐ.ஜி.யோகேஷ்பா லாஜி வி.ஜெயசூர்யா, எஸ். ஜான்சிராணி, எம்.சகினா பேகம், சி.தயாபிரசாத் மற் றும் கழக முன்னோடிகள், பி.எல்.ஏ. 2, பி.எல்.சி., உறுப் பினர்கள், செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்த னர்.

இரா.சதீஷ்குமார் தலைமை! ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி வரவேற்புரை!

திருப்பெரும்புதூர் பேரூர்க் கழக துணைச் செயலாளர் மு.ஆறுமுகம் இல்ல மணவிழா!

தா.மோ.அன்பரசன் – த.துரைசாமி– படப்பை ஆ.மனோகரன் வாழ்த்துரை!

காஞ்சிபுரம், நவ. 4 -

காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர் வட் டம், எம்.ஜி.ஆர். நகர், ராமானுஜர் தெரு, எண்.9, முத்து, - திருமதி. பச்சை யம்மாள் ஆகியோரின் பேரனும், திருப்பெரும் புதூர் பேரூர் கழக துணைச் செயலாளரும், முரசொலி முகவருமான மு.ஆறு முகம் - திருமதி. ஆ.மஞ் சுளா ஆறுமுகம் ஆகியோ ரின் புதல்வருமான ஆ. லோகேஷ்க்கும், இராணிப் பேட்டை மாவட்டம், ஆற் காடு வட்டம், பாப்பேரி கிராமம், தேவராஜ் பவு ணம்மாள் ஆகியோரின் பேத்தியும் குமார் - கு. சாமுண்டீஸ்வரி ஆகியோ

ரின் புதல்வியுமான கு. ஜோதிலட்சுமிக்கும் மண விழா 07.11.2024 - வியா ழக்கிழமை காலை 9 மணி யளவில் திருப்பெரும்புதூர் வல்லக்கோட்டை அருகில் அமைந்துள்ள ஏ.ஜி.என். ஏசி மஹால் திருமண மண் டபத்தில் நடைபெறுகிறது.

இத்திருமணத்தில் காஞ் சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளரும், சிறு,குறு மற்றும் நடுத்தர நிறு வனங் களின் துறை அமைச்சரு மான தா.மோ.அன்பரசன், த.துரைசாமி, படப்பை ஆ.மனோகரன், அ.தமிழ் மாறன், மா. கணேஷ்பாபு, ஜா.செந்தில் குமார் ப.ராம மூர்த்தி, எஸ்.கே.பாலா (எ) பால்ராஜ், மாலதி போஸ்கோ, கு.ப.முருகன், எல்.டி.ஜார்ஜ், த.தனிகாச லம், க.முருகன், ப.முத்து குமாரசாமி, ச.தேவேந்திர பாபு, கோ.வினாயக மூர்த்தி, எ.அரிக்கிருஷ்ண ன், ஜா. முனிரத்தினம், ஏ. டோம்னிக், இரா.அருண் பாரத், டாக்டர். ஓவியா முருகன், பி.ரவி, இரா.பிர காசம், ந.சத்தியா, இரா. வெங்கடேசன், இ.முரளி, எஸ்.டி.கே.சபரிராஜா, சு. விஜய குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் ஜெ.வேணுகோபால், எஸ். பி.சி.குமார், ஆர்.விஜயலட் சுமி, பி.குமார், ஆர்.காத்த வராயன், ஜி.கே.கார்த்திகே யன், பி.ஆர்.சம்பத், சாந்தி சதீஷ்குமார், இந்திராணி சுப்பரமணி, என்.சாதிக் பாஷா, எஸ்.ரவி, கே.ஸ்ரீதர், பி.சரவணன், எஸ்.பாபு (எ) புருஷோத்தமன் மற்றும் கழகத் தோழர்களும், முன்னோடிகளும், இளை ஞரணி, மாணவரணி, மக ளிரணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

கே.கார்த்திகேயன் நன்றி கூறுகிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதி வாரியாக செயல்வீரர்கள் கூட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்காக, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதிவாரியாக செயல் வீரர்கள் கூட்டம். கீழ்க்கண்ட தேதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் கீழ்காணும் விவரப்படி நடைபெற உள்ளது.

நாள்	நேரம்	சட்டமன்றத்தொகுதி	கூட்டம் நடைபெறும் இடம்
10.11.2024 ஞாயிறு	காலை 9.00 மணி	ஆலந்தூர் சட்டமன்றத்தொகுதி	சக்தி பேலஸ் திருமணமண்டபம், பரணிபுத்தூர்
	மாலை 4.00மணி	திருப்போரூர் சட்டமன்றத்தொகுதி	கணேஷ் மகால் திருமண மண்டபம், காலவாக்கம், திருப்போரூர்
15.11.2024 வெள்ளி	காலை 9.00 மணி	செங்கல்பட்டு சட்டமன்றத்தொகுதி	ஆழ்வார்பேலஸ் திருமண மண்டபம், மறைமலைநகர்
22.11.2024 வெள்ளி	மாலை 4.00 மணி	திருப்பெரும்புதூர் சட்டமன்றத்தொகுதி	கல்யாணிதிருமணமண்டபம், மாங்காடு
	மாலை 4.00மணி	பல்லாவரம் சட்டமன்றத்தொகுதி	வெங்கடேஸ்வரா திருமண மண்டபம், 200அடி ரேடியல் சாலை, பல்லாவரம்
23.11.2024 சனி	மாலை 4.00மணி	தாம்பரம் சட்டமன்றத்தொகுதி	---------

இச்செயல்வீரர் கூட்டங்களில் அந்தந்த மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் ஒருங்கிணைந்து, இச்செயல்வீரர்கள் கூட்டங்களைசிறப்பான முறையில் ஏற்பாடு செய்து, இக்கூட்டத் திற்கானஅழைப்பிதழைமுறையாகஅச்சடித்து அந்தந்த சட்டமன்றத்தொகுதியில்அடங்கியுள்ளமாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர்களில் அடங்கிய வட்ட கிளைக் கழக நிர்வாகிகள் இளைஞர் அணி மாண வர் அணி மகளிர் அணி உள்ளிட்டகழகஅணிகளின்நிர்வாகிகள்வாக்குச்சாவடிநிலை முகவர்கள் வாக் குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் கழக செயல்வீ ரர்கள் அனைவருக்கும் முறையாக அழைப்பிதழைதந்து, அவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்து,இந்த6சட்டமன்றத்தொகுதிசெயல்வீரர்கள் கூட்டங்களை மிகவும் எழுச்சியான முறை யில் ஏற்பாடுசெய்திடவேண்டும்என்றுஅன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**
செயலாளர்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் – பரிதி இளம்சுருதி பங்கேற்பு!

சைதை கிழக்குப் பகுதி தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் வேண்டுகோள்!

சென்னை, அக்.4-

வருகிற 2026 சட்டமன்ற தேர்தலை சிறப்பாக எதிர் கொள்ளும் வகையில் சென்னை தெற்கு மாவட் டம், சைதை கிழக்குப் பகுதி தி.மு.க. ஆலோசனை கூட் டம் 06.11.2024 புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற உள்ள தாக பகுதி செயலாளரும், 13-வது வார்டு குழு தலைவ ருமான இரா.துரைராஜ் அறிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

மருத்துவம் மற்றும் மக் கள் நல்வாழ்வு துறை அமைச்சரும், சென்னை தெற்கு மாவட்ட செயலாள ருமான மா.சுப்பிரமணியன் வேண்டுகோள் படி சைதை கிழக்கு பகுதி தி.மு.க. ஆலோசனை கூட்டம் 06.11.2024 புதன்கிழமை, மாலை 5.00 மணிக்கு சென்னை 42, வேளச்சேரி, நேரு நகர் நெடுஞ்செழியன் தெருவில் அமைந்துள்ள சைதை கிழக்குப் பகுதி தி. மு.க. அலுவலகத்தில் பகுதி அவைத்தலைவர் இ.முருகே சன் தலைமையில், தலைமை செயற்குழு உறுப்பினரும், பெருநகர சென்னை மாநக ராட்சி துணை மேயருமான மு.மகேஷ் குமார், மாவட்ட அவை தலைவர் எஸ்.குண சேகரன், பொதுக்குழு உறுப்பினர்களான சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், பகுதி நிர்வாகிகள் ஆர்.ராஜ் குமார், மு.ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கிய லட்சுமி முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்த ஆலோசனை கூட் டத்தில் அமைச்சர் மா.சுப்பி ரமணியன், சைதை தொகுதி மேலிட பார்வை யாளர் பரிதி இளம்சுருதி ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனை வழங்குகி றார்கள்.

எனவே நமது சைதை கிழக்கு பகுதியில் உள்ள வட்ட கழக செயலாளர் கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் தலை வர்கள், துணை தலைவர் கள், துணை அமைப்பாளர் கள், பகுதி அணிகளின் தலைவர்கள் , துணை தலை வர்கள், அமைப்பாளர்கள், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், அனைவரும் குறித்த நேரத் தில் தவறாமல் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு இரா.துரை ராஜ் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

122வது வட்ட துணைச் செயலாளர்

தி.குமார் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, நவ.4-

சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 122வது வட்ட துணை செயலாளர் தி.குமார் நேற்று (03.11.2024) மாலை 3 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகி றோம். அன்னாரது இறுதி சடங்கு இன்று (04.11.2024) மாலை 3 மணியளவில் தியாகராயர் நகர் கண்ணம்மாபேட்டை இடுகாட்டில் நடைபெறுகிறது. தகவல் அறிந்ததும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகி கள், கழக மூத்த முன்னோடிகள், அணிகளின் நிர்வாகிகள், 122வது வட்ட கழகத்தினர் உள்ளிட்ட ஏராள மானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

மாவட்ட கழகச் செயலாளர் – திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ., அறிக்கை!

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பா ளர்கள் ஆலோசனை கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் கே.திராவிட பக்தன் தலைமையிலும், கழக கொள்கை பரப்பு செயலாளர் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான வி.ஜி.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையிலும் நாளை (05.11.2024, செவ்வாய்க்கிழமை) மதியம் 3 மணியளவில் திருத்தணி நகரம் கமலா திரையரங்கம் அருகில் உள்ள ஸ்ரீ விஜயா மஹால் மண்டபத்தில் நடைபெறுகிறது.

அது சமயம் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, தொகுதி பார்வையாளர்கள் சண்முகநாதன், மாஸ்டர், பெ.சேகர், கழக விவசாய அணி துணை செயலாளர் ஆர்.டி.இ.ஆதிஷேசன், கழக நெசவாளர் அணி துணை தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், மாநில தொண்டரணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர் வி.சி.ஆர்.குமரன், பா.உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, எம். மிதுன்சக்ரவர்த்தி, பொதுகுழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு, எ.கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.ராஜேஸ்வரிஇரவிந்திரநாத் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

மேற்கண்ட கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:1. தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் தொடர் நிகழ்ச்சிகள் நடத்துவது குறித்து. 2. வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட உடன் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் அப்பணியினை மேற்கொள்வது குறித்து முழுமையாக. 3. கழக ஆக்கப் பணிகள்.

குறிப்பு: செயற்குழுவிற்கு வரக்கூடிய ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை முதலமைச்சரின் பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகள் ஏற்பாடுகள் குறித்த விவரங்களுடன் வருகை தர வேண்டும்.

திருத்தணி எஸ்.சந்திரன்,எம்.எல்.ஏ.,
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.